களையும் பெற்றுத் தருகிற ஒரு நிலையை நமது அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன். அல்லது குறைந்தபட்சம் அதற்கான நஷ்டஈட்டை இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெற்றுத் தர அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, சொத்துக்களையும், உடைமைகளையும் மட்டுமல்ல நிலத்தையும் மீட்கத்தான் போராடுகிறார்கள்.

துறையூர் ஒன்றியத்திற்கு காவேரியிலிருந்து குடிநீர் வழங்கல்

182—(*வினா எண் 7312) **திருமதி இரா. சரோஜா:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம் துறையூர் ஒன்றியத்திற்கு காவேரியிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இல்லை.

திருமதி இரா. சரோஜா: தலைவர் அவர்களே, தமிழகத்தில் இப்போது நிலவி வரும் வறட்சியினை கணக்கில்கொண்டு குடிதண்ணீர் தட்டுப்பாட்டைப் போக்கும் வகையில் இந்த ஆண்டிலாவது துறையூர் ஒன்றியத்திற்கு குடிதண்ணீர் கொண்டு வரும் திட்டத்தை அரசு செயல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, துறையூர் பேரூராட்சியின் மக்கள் தொகையை மனதிலே கொண்டு ரூ. 48.7 லட்சம் மதிப்பீட்டில் ஐயாறு நதியினை நீர் ஆதாரமாகக் கொண்டு ஒரு குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டிருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS